**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 55/2017 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா. 1** |
| Name : | **திருமதி. காந்தாமணி** |
| Father's Name/Husband Name: | **திரு. ராமசாமி** |
| Village : | வயலப்பாடி |
| Taluk : | **குன்னம்** |
| Age : | 41/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 09.09.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 1 ஆஜர் எதிரிகள் 2, 3 ஆஜர் இல்லை கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் வெண்மணி கிராமத்தில் சத்துணவு உதவியாளராக பணிபுரிகிறேன். கடந்த 2010ம் வருடம் நன்னை கிராமத்தில் குடியிருந்தேன். ப.சா.2 மலர்க்கொடி எனது தாயார். ப.சா.3 இளங்கோவன் எனது தகப்பனார். 1வது எதிரி ராமசாமி எனது கணவர். 2வது எதிரி முருகேசன் மற்றும் 3வது எதிரி முத்துசாமி ஆகியோர்கள் எனது கொழுந்தனார். எதிரி 4 அஞ்சலை 5வது எதிரி காஞ்சனா எனது கொழுந்தனார் மனைவி. 6வது எதிரி பாப்பாத்தி எனது மாமியார். 7வது எதிரி சுந்தரம் எனது கணவரின் அத்தை. 8வது எதிரி சின்னம்மாள் எனது கணவரின் உறவினர். சம்பவத்திற்கு முன்பாக எனக்கும், எனது கணவருக்கும் இடையே சின்ன சின்ன சண்டைகள் இருந்து வந்தது. நான் என் அப்பா வீட்டிலிருந்து கடன் வாங்கிக் கொண்டு வந்து வீடு கட்டினேன். வீடு கட்டி குடிபோகும்போது அந்த பணத்தை நான் வாங்கிய கடனை கொடுப்பதற்காக என் அப்பா வீட்டிற்கு சென்றேன். அந்த பணத்தில் பாதியை கடன் கொடுக்க விடாமல் என் கணவர் பிடுங்கிக் கொண்டு

வந்து விட்டார். அதன் பிறகு நான் என் அப்பா வீட்டிலேயே இருந்தேன். பின் சமாதானம் பேசினார்கள். அதன் பிறகு 22.04.2010ம் தேதி நான் என் வீட்டிற்கு வந்தேன். நான் வந்த பிறகு என் கணவருக்கும் எனக்கும் இரவு சின்ன சண்டை வந்தது. மறு நாள் காலை என் அம்மாவிற்கும் அப்பாவிற்கும் சொல்லி வர சொன்னேன் என் அம்மா அப்பா காலை 10 மணியளவில் என் வீட்டிற்கு வந்தனர். என் கணவரிடம் என்ன பிரச்சனை என்று சொல்லி கேட்டனர். அவ்வாறு கேட்டதற்கு எதிரிகள் அனைவரும் சேர்ந்து என் அம்மா அப்பாவிடம் சண்டை பிடித்தனர். ரோட்டில் நின்று கொண்டிருந்து அசிங்க அசிங்கமாக அனைத்து எதிரிகளும் பேசினர். தேவிடியா, தட்டுவாணி என்று அசிங்கமாக பேசி வந்தா ஒழுங்கா இருக்க மாட்டியா என்று அசிங்கமாக பேசினார்கள். அப்போது நான் 6 மாதம் கர்ப்பிணியாக இருந்தேன். என்னை வீட்டிற்கு பக்கத்தில் உள்ள போஸ்ட் கம்பத்தில் வயிற்றில் கயிறு கொண்டு இரு கைகளையும் பின் பக்கம் வைத்தும் கழுத்தில் சேலையின் முந்தாணையை வைத்தும் எதிரிகள் முருகேசனும், முத்துசாமியும் கட்டினர். என்னை எதிரிகள் முருகேசனும், முத்துசாமியும் குச்சியால் அடித்தனர். தடுக்க வந்த என் அம்மாவையும் குச்சியால் எதிரிகள் முருகேசனும், முத்துசாமியும் அடித்தனர். என் அம்மாவை என் கணவர் குச்சியால் அடித்ததில் இடுப்பில் கை நுழையும் அளவிற்கு ஓட்டையாகி காயம் ஏற்பட்டது. என் மாமியார் மற்றும் அனைவரும் சேர்ந்து என் அம்மாவை விலக்கமாற்றால் அடித்தனர். என்னை என் மாமியார் நெருப்பால் வலது தோள் பட்டையில் சூடு வைத்தார். என்னை கட்டிப் போட்டுவிட்டு அவிழ்க்கவிடாமல் எதிரிகள் எங்களுக்கு முன் காவல் நிலையம் சென்று எங்களுக்கு எதிராக புகார் கொடுத்தனர். எனது அம்மாவை எனது அப்பா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். திலகவதி என்ற நபர் என் கட்டுகளை அவிழ்த்து விட்டு ஆட்டோ மூலமாக என்னை அனுப்பி வைத்தார். வழக்கு சம்மந்தமாக காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அந்த **புகார் மனு அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இச்சம்பவத்தால் என் கர்ப்பப்பை கீழே இறங்கி ஒரு மாத காலம் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். நான் அளித்த புகார் சம்மந்தமாக 15 நாட்கள் கழித்து போலிசார் விசாரித்தனர். அப்போது நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் நீதிமன்றத்தில் கூறிய சங்கதிகளை தான் எனது புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மொய் பணத்தை எனது கணவர் பாதி பிடுங்கிக் கொண்டார் என்ற விவரம் புகாரிலும், போலிசார் விசாரணையிலும் இல்லை என்றால் அப்போது நான் அதை சொல்ல மறந்துருப்பேன். திலகவதி எனது கட்டை அவிழ்த்துவிட்ட விபரத்தை நான் புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் அவர் என்னிடம் சொல்ல வேண்டாம் கூறினார் அதனால் நான் சொல்லவில்லை. சொல்ல வேண்டாம் என்று திலவகதி கூறிய விபரத்தை போலிசாரிடம் நான் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. சம்பவத்தன்று நான் 6 மாதம் கர்ப்பிணியாக இருந்த விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் ஒரு மாதம் மருத்துவமனையில் இருந்தேன் என்ற விவரத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ஆவணங்களை போலிசார் விசாரணையில் கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. உண்மையிலேயே மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தால் அதற்கான ஆவணங்களை போலிசார் விசாரணையில் கொடுத்திருப்பேன் என்றால் கொடுத்திருப்பேன் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்த மறு நாள் நான் புகார் கொடுத்தேன். நான் மருத்துவமனையில் இருக்கும்போது தான் போலிசார் என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் போலிசார் விசாரணையில் என் அம்மாவை மருத்துவமனையில் உள் நோயாளியாக சேர்த்துவிட்டு நான் சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை அதன்பிறகு தான் நிலையம் ஆஜராகி புகார் கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னை கடந்த 09.05.2010 அன்று தான் விசாரணை செய்திருக்கிறார்கள் என்றாலும், மேற்கண்டவாறு நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தால் அந்த விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றால் சொல்லியிருக்கேன். போலிசார் விசாரணையில் நான் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்ற விபரங்கள் எதுவும் இல்லை என்றால் நான் சொல்லியிருக்கேன். எனது கணவர் வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். எனது கணவர் வெளிநாட்டிலிருந்து எனக்கு பணம் அனுப்பினார் என்றால் ஒரு லட்சத்து ஐந்தாயிரம் மட்டும் அனுப்பினார்.

அவர் அனுப்பிய பணத்தை கேட்டு தான் பிரச்சனை உண்டானது என்றால் சரியல்ல. இந்த பிரச்சனை சம்மந்தமாக 1ம் எதிரியும் சகோதரர்களான முத்துசாமி மற்றும் முருகேசன் கேட்டதற்கு மண்வெட்டியை எடுத்து நானும் எனது அம்மாவும் சேர்ந்து முத்துசாமியின் தலையில் அடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. அதன்பிறகு முத்துசாமி பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் ஒரு வாரம் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றுக் கொண்டார் என்றால் அது எனக்கு தெரியாது. குன்னம் போலிசார் 24.04.2010ம் தேதி முத்துசாமியிடம் மேற்கண்ட சம்பவம் குறித்து வாக்குமூலம் பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. முத்துசாமியின் வாக்குமூலத்தின் அடிப்படையில் குன்னம் காவல் நிலையத்தில் குற்ற எண் 133/2010 என்ற வழக்கு எனக்கும் என் அம்மா அப்பாவிற்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அந்த வழக்கு முடிந்துவிட்டது. எதிரிகளுக்கெதிராக 04.05.2010ம் தேதி தான் நான் குன்னம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் நான் முன்னாடியே புகார் கொடுத்துவிட்டேன் போலிசார் புகாரை எடுத்துக் கொள்ளாமல் கால தாமதமாக வழக்கு பதிவு செய்தது 04.05.2010ம் தேதி. 09.05.2010ம் தேதி போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பெறுவதற்கு முன்பே என் மீது மேற்கண்ட குற்ற எண்ணில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு அரசியல் செல்வாக்கு இருப்பதால் தான் எனக்கெதிரான வழக்கு காவல் நிலையத்திலிருந்தும், எதிரிகளுக்கெதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சாட்சியாக அழைப்பாணை பெற்ற பின்பு நான் நீதிமன்றத்தில் முன்னிலையாகி எனக்கு எதிராக உள்ள மேற்கண்ட வழக்கை விசாரணை செய்தால் தான் நான் சாட்சியம் அளிப்பேன் என்று கூறி சாட்சியம் அளிக்காமல் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எனது அம்மாவை மருத்துவமனையில் சேர்த்த பிறகு மருந்து ஆவணங்களின் படி சிகிச்சைக்கான விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அதில் மருத்துவ விபத்து பதிவேட்டில் 3 நபர்கள் தாக்கியதாக எனது அம்மா கூறியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அம்மா எத்தனை நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள் என்றால் 5 நாட்கள். அவ்வாறு எனது அம்மா மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது போலிசார் அவரிடம் வாக்குமூலம் பெற்றிருப்பார்கள் என்றால் வாங்கியிருப்பார்கள். என் அம்மா கொடுத்த வாக்குமூலம்

எதிரிகளுக்கு எதிராக இல்லாததால் தான் நான் அதை மறைத்துவிட்டு நான் காவல் நிலையம் சென்று அனைத்து எதிரிகளின் மீதும் பொய்யான புகார் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி முத்துசாமி உள் நோயாளியாக சிகிச்சையிலிருக்கும்போது கொடுத்த வாக்குமூலத்திற்கு போட்டியாக தான் நான் எதிரிகள் மீது பொய்யான சங்கதிகளை கூறி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையான சம்பவம் நடந்திருந்தால் நீதிமன்ற முதல் விசாரணையிலும் சம்பவ நடந்த தேதி, நேரம் ஆகியவற்றை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றால் நான் மறந்துவிட்டேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் குற்றச்சாட்டிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. போலிசார் விசாரணையிலோ, புகாரிலோ காலதாமதத்திற்கான காரணம் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அப்போது சொல்லும் மனநிலையில் நான் இல்லை. 15 நாள் கழித்து தான் போலிசார் விசாரணை செய்தார்கள் என்று முதல் நிலை சாட்சியத்தில் சொல்லியுள்ளபோதும், அப்போதும் கால தாமதத்திற்கான காரணத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் சொல்லும் மனநிலையில் நான் இல்லை. நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான ஆவணங்களை தற்போதாவது கொடுக்க முடியுமா என்றால் 10–15 வருடங்கள் ஆகிறது எப்படி என்னால் கொடுக்க முடியும். நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தால் அதற்கான ஆவணங்களை போலிசார் விசாரணையில் முன் வைத்திருப்பேன் அவ்வாறு சிகிச்சை ஏதும் பெற்றுக் கொள்ளாமலேயே வழக்கிற்காக இட்டுக்கட்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/- xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.